RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-4 இதழ்- 344 டிசம்பர்.14 2025 ஞாயிற்றுக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## டில்லிக்கு புறப்பட்டு சென்றார் தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன்



சென்னை, டிச.14-

பரபரப்பான அரசியல் சூழலுக்கு மத்தியில், தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் டில்லி புறப்பட்டு சென்றார்.

அதிமுக பொதுக்குழுவில், கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்கும் முழு அதிகாரமும் பழனிசாமிக்கு வழங்கப்படுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் நேற்றுமுன்தினம் இபிஎஸ்ஐ சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அவரது இல்லத்தில், தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்து பேசினார்.

பின்னர் நிருபர்கள் சந்திப்பில் கூட்டணி மற்றும் தொகுதி பங்கீடு குறித்து ஏதும் இபிஎஸ் உடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என நயினார் நாகேந்திரன் திட்டவட்டமாக கூறினார். இருந்தாலும், இந்த சந்திப்பில் கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது. இந்த பரபரப்பான அரசியல் சூழலுக்கு மத்தியில், இன்று நயினார் நாகேந்திரன் டில்லி புறப்பட்டு சென்றார்.

அவர், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பா.ஜ., தேசிய தலைவர் நட்டா உள்ளிட்டோரை சந்திக்கிறார். தொகுதி பங்கீடு மற்றும் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரனை தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைப்பது குறித்து விவாதிப்பார் என தெரிகிறது. டில்லியில் அமித் ஷாவை சந்தித்த பின், நயினார் நாகேந்திரன் மீண்டும் இபிஎஸ்ஐ சந்தித்து, இதுதொடர்பாக பேசுவார் என வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

## ஆர்எஸ்எஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டது ஏன்: விமர்சனத்துக்கு சீமான் பதில்




சென்னை, டிச.14-

சென்னையில் நடந்த ஆர்எஸ்எஸ் நிகழ்வில் கலந்து கொண்டது விமர்சனத்திற்கு உள்ளானது குறித்து நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் விளக்கம் அளித்தார்.

ஆர்.எஸ்.எஸ்.,சின் பொது விவாத நிகழ்ச்சிகளை நடத்தும் அமைப்பான, 'விஜில்' சார்பில், சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில், 'பாரதி பிறந்த தினம் மற்றும் வந்தே மாதரம் 150வது ஆண்டு தினம்' விழா நடந்தது.

'பாரதி கண்ட பங்கிம் சந்திர சட்டர்ஜியின் வந்தே மாதரம்: தமிழ் இளைஞர்களின் பார்வைக்கு' என்ற தலைப்பில் இந்த விழாவில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், கவிஞர் வைரபாரதி ஆகியோர் பேசினர்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றது குறித்து நிருபர்களிடம் சீமான் கூறியதாவது:

கலந்து கொண்டது குறித்து விமர்சனங்கள் ஏதும் இல்லை என்றால் ஏன் கலந்து கொள்ள வேண்டும்? ஆர்எஸ்எஸ் மற்றும் திமுக சமூக இயக்கங்கள் என்று சொன்னது நானா, அவர்களா? அது ஆர்எஸ்எஸ் இயக்கம் அது எல்லாம் கிடையாது. இலக்கிய அமைப்பு பாரதி பற்றி பேசு என்று சொன்னார்கள். நான் பாரதியை எங்கும் பேசுவேன். பாரதி இருக்கிற இடத்தில், பாரதி என்பது தமிழ். தமிழ் என்பது எனது தாய்.

தாய் இருக்கும் இடத்தில் மகன் இருப்பேன். அவ்வளவு தானே, நாளைக்கு திமுகவை பாரதி பற்றி கூட்டம் போட சொல்லுங்கள், நான் போய் பேசுகிறேன். 12 வருடம் திராவிட கழகம் மேடையில் பேசும் போது இனித்தது. ராஜ்நாத் சிங் உங்கள் தந்தையின் காசுவை வெளியிட்டார். பாஜவுக்கு 5 ஆண்டுகள் நிலையான ஆட்சியை கொடுத்து, இந்தியா முழுமைக்கும் தனது அதிகார கிளையை பரப்புவதற்கு உதவியாக இருந்தவர் கருணாநிதி என ராஜ்நாத் சிங் பேசியது வீடியோ இருக்கிறது போட்டு காட்டவா?

இன்றைக்கு வேல்ஸ் திறப்பு விழாவில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பங்கேற்கும் போது உங்கள் அமைச்சர், உங்கள் ராஜ்யசபா எம்பி கமல் பங்கேற்கிறார்களே இதற்கு கருத்து? எங்க போய் நிற்கிறேன் என்று பேசாதே, என்ன பேசினேன் என்று பேசுங்கள். இவ்வாறு சீமான் கூறினார்.

## மானாமதுரை அருகே பயணிகள் மற்றும் பள்ளி குழந்தைகளை நடுவழியில் இறக்கி விட்டுச் சென்ற அவலம்



மானாமதுரை, டிச.14

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையை அடுத்த மேலப்பசலை பஞ்சாயத்திற்குட்பட்ட அரிமண்டபம் கிராமம் உள்ளது இங்கு 150க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் மற்றும் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மக்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்திற்கு மானாமதுரை புதிய பேருந்து நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் 5 மணிக்கு புறப்பட்டு செல்லும் அரசு டவுன் பேருந்து எண் 19, அரிமண்டபம் செல்லும்போது, சாலையில் லாரியில் பொக்லைன் ஏற்றப்படுவதால், சாலையில் செல்ல போதிய இடைவெளி இல்லை எனக்கூறி அரிமண்டபத்திற்கு நான்கு கிலோமீட்டர் முன்னால் உள்ள தீயனாரில் 10 க்கும் மேற்பட்ட பள்ளி குழந்தைகள் மற்றும் பேருந்து பயணிகளை இறக்கிவிட்டு நடத்துனர் சென்றுள்ளார். பேருந்து நடத்துனர் நடுவழியில் இறக்கி விட்டதை தொடர்ந்து, பள்ளி குழந்தைகள் மற்றும் பேருந்து பயணிகள் நான்கு கிலோமீட்டர் நடந்து சென்ற அவலம் அரங்கேறியுள்ளது. குறிப்பாக சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இக்கிரமத்திற்கு பேருந்துகள் இயக்கப்படுவதில்லை என்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டினர். மேலும் இதேபோல் மூன்று நாளுக்கு முன்பாக விவகாரம் தொடர்பாக பொதுமக்கள் தகவல் கேட்டபோது, முன்பு பேருந்து பஞ்சராகியதால் பேருந்து இயக்கவில்லை என்று பதில் அளித்தனர். குறிப்பாக பேருந்து பஞ்சராகி இயக்கப்படாத அன்றைய தினம் கிராம பொதுமக்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் சிலர் சுமார் 8 கிலோமீட்டர் நடந்து சென்றதாகவும், சிலர் ஆட்டோவில் சென்றதாகவும் தெரிய வருகிறது. எனவே உடனடியாக போக்குவரத்து துறை மேலாளர் சம்பந்தப்பட்ட பேருந்து நடத்துனர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் நடுவழியில் பள்ளி குழந்தைகளை இறக்கி விட்டுச் சென்றதற்கான உரிய காரணம் வழங்க வேண்டுமென கிராமப் பொதுமக்கள், பேருந்து பயணிகள் மற்றும் பள்ளி குழந்தைகள் வலியுறுத்தியுள்ளனர்.

## "கேரளா ஆட்சி மாற்றத்தை விரும்புகிறது" உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளை அடுத்து ராகுல் கருத்து




புதுடெல்லி: டிச.14-

"மக்கள் சொல்லும் பிரச்சினைகளை கேட்கும், பதிலளிக்கும், வாக்குறுதியை நிறைவேற்றும் பொறுப்பான ஆட்சியை கேரளா விரும்புகிறது என்பதையே உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன" என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

கேரள உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் வெளியாகி வருகின்றன. இதுவரையிலான முடிவுகளின்படி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி முதலிடத்தில் உள்ளது. ஆளும் சிபிஎம் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி இரண்டாம் இடத்திலும், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மூன்றாம் இடத்திலும் உள்ளன.

தேர்தல் முடிவுகளை அடுத்து காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், ''உள்ளாட்சித் தேர்தலில் ஐக்கிய ஜனநாயக முன்னணி மீது நம்பிக்கை வைத்த கேரள மக்களுக்கு ஒரு சல்யூட். இது ஒரு தீர்க்கமான மற்றும் உற்சாகம் அளிக்கும் மக்கள் ஆணை.

ஐக்கிய ஜனநாயக முன்னணி மீதான நம்பிக்கை அதிகரித்து வருவதற்கான தெளிவான அறிகுறியாக இந்த முடிவுகள் உள்ளன. மேலும், வர இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் நமது மாபெரும் வெற்றிக்கு இது வழிவகுக்கும். மக்களின் பிரச்சினைகளை கேட்கும், பதில் அளிக்கும், வாக்குறுதிகளை நிறைவேற்றும் பொறுப்பான ஆட்சியை கேரளா விரும்புகிறது என்பதே இந்த தேர்தலின் செய்தி.

கேரளாவின் சாமானிய மக்களுடன் நிற்பது, அவர்களின் அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, வெளிப்படையான மற்றும் மக்களை மையமாகக் கொண்ட நிர்வாகத்தை உறுதி செய்வது என்பதில் எங்கள் கவனம் அசைக்க முடியாததாக இருக்கும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பிரதிநிதிகளுக்கும் வாழ்த்துகள். இந்த வெற்றியை சாத்தியமாக்க அர்ப்பணிப்புடன் கடினமாக உழைத்த தலைவர்கள் மற்றும் தொண்டர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்'' என தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், ''உள்ளாட்சித் தேர்தலில் ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கு வழங்கப்பட்ட தீர்க்கமான தீர்ப்புக்காக இந்திய தேசிய காங்கிரஸ், கேரள மக்களுக்கு தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

அடுத்த சில மாதங்களில் நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தல்களிலும் எங்கள் கூட்டணி இதேபோன்ற மக்கள் தீர்ப்பைப் பெறும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்த நம்பிக்கையுடன் காங்கிரஸ் கட்சி பொறுப்புடனும் ஒரே நோக்கத்துடனும் பிரச்சாரத்தில் ஈடுபடும்'' என தெரிவித்துள்ளார்.

## 'ஸ்மார்ட் மதுரை' மாநகராட்சி சார்பில் புதிய செயலி அறிமுகம் சிறப்பு அம்சங்கள்




மதுரை, டிச.14-

சட்டப்பேரவைத் தேர்தல் நெருங் கும் நேரத்தில் குடிநீர், சுகாதாரம், சாலை மற்றும் தெருவிளக்கு சேவைக் குறைபாடுகளை அரசியல் கட்சிகள் பூதாகரமாக்கி பொதுமக்கள் போர்வையில் சமூக வலைதளங்களில் பதிவு செய்து அரசியலாக்குகின்றனர்.

இதனால், மக்களே அதிகாரிகளை நேரடியாகத் தொடர்புகொண்டு தங்கள் குறைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மாநகராட்சி ஆணையர் சித்ரா, 'ஸ்மார்ட் மதுரை' என்ற புதிய செயலியை நேற்று அறிமுகம் செய்தார். இந்த நடவடிக்கை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மாநகராட்சியில் போதுமான வரி வசூலாகாமல் ஊழியர்களின் ஊதியத்துக்கும், மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கும் நிதி ஒதுக்குவதில் சிக்கல் ஏற்பட்டது. ஆணையராக சித்ரா வந்த பிறகு வரி வசூலை மேம்படுத்தி சொத்துவரி முறைகேட்டில் நடந்த குளறுபடிகளை அம்பலப்படுத்தி நடவடிக்கை எடுத்தார்.

இதனால், மாநகராட்சிக்கு தற்போது ஆண்டுக்கு ரூ.20 கோடி வருவாய் அதிகரித்துள்ளது. வரி வசூலிலும் தமிழக அளவில் மதுரை மூன்றாம் இடம் பிடித்தது. ஏலம் போகாத வருவாய் இனங்களை மேம்படுத்தி அவற்றை ஏலம் விட நடவடிக்கை எடுத்துள்ளார்.

மாநகராட்சியில் நீடிக்கும் திமுக, அதன் கூட்டணிக் கட்சிகள் மோதல், திமுக உட்கட்சி பூசல், திமுகஅதிமுக நேரடி மோதல் போன்ற பல்வேறு காரணங்களால், அவர்கள் பொதுமக்கள் போர்வையில் ஆளும்கட்சிக்கு நெருக்கடி கொடுப்பதாக நினைத்து மாநகராட்சி நிர்வாகத்துக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி மற்றும் அரசியல் கட்சியினர் சிலர் கூறியது: அன்றாடம் குடியிருப்புகளில் நடக்கும் குடிநீர் குழாய் உடைப்பு, பாதாள சாக்கடை, சுகாதாரக் குறைபாடுகள் மற்றும் தெருவிளக்கு பிரச்சினைகளைக்கூட அரசியல் கட்சியினர் பொதுமக்கள் போர்வையில் சமூக வலைதளங்களில் பதிவிடுகின்றனர்.

பொதுமக்களுக்காக மைய அலுவலகம், மண்டல அலுவலகங்களில் பணிபுரியும் நேர்மையான அதிகாரிகள் முதல் ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள் வரை அன்றாடம் பெரும் சிரத்தை எடுத்துப் பணிகளைச் செய்து வருகின்றனர்.


சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்குவதையொட்டி எதையும் அரசியலாக்கத் துணிந்துள்ள அரசியல் கட்சிகள், மக்கள் பிரச் சினைகளைக் கையில் எடுப்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கு மாற்றுத்தீர்வாக, ஆணையர் சித்ரா புதிய உத்தியைக் கையாண்டுள்ளார்.

அதாவது பொதுமக்களே அதிகாரிகளை நேரடியாகத் தொடர்புகொண்டு தங்கள் குறைகளுக்குத் தீர்வு காணும் வகையில் 'ஸ்மார்ட் மதுரை' என்ற புதிய செயலியை அறிமுகம் செய்துள்ளார்.

இதுகுறித்து மாநகராட்சி நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், ''பொதுமக்கள் தங்கள் மொபைல் போனில் உள்ள ப்ளே ஸ்டோரில் 'ஸ்மார்ட் மதுரை' செயலியை பதிவிறக்கம் செய்ய வேண்டும். இந்தச் செயலியில் பொதுமக்கள் இருப்பிடத்தில் இருந்தே தங்கள் பகுதியில் உள்ள சேவை குறைபாடுகளைத் தெரிவிக்கலாம். தெருவிளக்கு, குடிநீர் விநியோகம், திடக்கழிவு சேகரிப்பு, சாலைகள் பராமரிப்பு போன்றவற்றைப் பற்றியும் புகார்களை இந்தச் செயலியில் தெரிவிக்கலாம்.

மாநகராட்சியின் இதர சேவைகளைப் பற்றியும் பொதுமக்கள் தங்களின் குறைகளைத் தெரிவித்து இந்த புதிய செயலி மூலம் தீர்வு காணலாம், எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் தெரிவிக்கப்பட்ட புகார்கள் மீது விரைவான நடவடிக்கை எடுக்கப்படுவதால் புதிய செயலி வரவேற்பைப் பெறத் தொடங்கி உள்ளது. செயலியை கண்காணிக்க தனி அதிகாரிகள் குழுவையும் ஆணையர் நியமித்துள்ளார்.

## ஆளுக்கொரு வழியில் ஓபிஎஸ், தினகரன்! போகும் வழி தெரியாமல் நிற்கும் சசிகலா



சென்னை, டிச.14-

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுகவின் அத்தனை தலைவர்களும், "சின்னம்மா பொதுச்செயலாளர் பொறுப்பை ஏற்று முதலமைச்சராக வரவேண்டும்" என்று மாய்ந்து மாய்ந்து பேட்டி கொடுத்தார்கள். அப்படிச் சொன்னவர்களில் அநேகம் பேர் இப்போது அவருக்கு எதிராக நிற்கிறார்கள்.

உள்ளுக்குள் விசுவாசம் வைத்திருக்கும் ஒருசிலரும் அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். இதனால் தனித்து விடப்பட்ட தலைவராகி இருக்கிறார் சசிகலா.

ஜெயலலிதா காலத்தில் அதிமுகவின் அதிகார மையமே சசிகலா குடும்பம் தான். அதனால் அந்தக் கட்சிக்கு நல்லதும் இருந்தது கெட்டதும் இருந்தது. இது தெரிந்து தான் சசிகலா தரப்பை ஒரேயடியாக ஒதுக்கிவைக்க முடியாமல் தவித்தார் ஜெயலலிதா.

அதேசமயம் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, சசிகலாவின் பின்னால் பயபக்தியுடன் வந்து நின்ற அதிமுக தலைவர்களுக்கு, அவர் சிறைக்குச் சென்ற பிறகு பயமும் பக்தியும் பறந்துவிட்டது. அதனால், அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் ஒரேயடியாக கட்சியைவிட்டே தள்ளிவைத்தார்கள்.

இருந்தாலும் அதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாத சசிகலா சிறை மீண்டதிலிருந்தே, "அதிமுகவை ஒருங்கிணைப்பேன்... அம்மா ஆட்சியை மீண்டும் கொண்டுவருவேன்" என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார். கேட்பதற்கு இது நன்றாக இருந்தாலும் ஒருங்கிணைப்புக்கான சாத்தியங்கள் தெரியவில்லை என்பது தான் நிதர்சனம்.

"அதிமுகவை ஒருங்கிணைப்பது தொடர்பாக பேசிவருகிறேன்" என திரும்பத் திரும்பச் சொல்லி வரும் சசிகலா, யாருடன் பேசுகிறேன்... என்ன பேசுகிறேன் என்பதை 'சஸ்பென்ஸாகவே(!)' வைத்திருக்கிறார்.

அதனால், என்றைக்காவது விடிவு பிறக்கும் என்ற நம்பிக்கையில் அவர் பின்னால் நின்ற ஒரு சிலரும் இப்போது தங்களுக்கான வழிகளைத் தேடி போய்விட்டார்கள்.

அண்மையில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வந்த சசிகலாவுடன் அவரது உதவியாளர் மட்டுமே வந்திருந்தார். மற்றவர்கள் எங்கே என்று கேட்டதற்கு, ''சின்னம்மா தான் யாரையும் வரவேண்டாம்னு சொல்லிட்டாங்க'' என்று சால்சாப்பு சொன்னார்கள்.

இந்தத் தேர்தலையும் விட்டுவிட்டால் சசிகலாவின் அரசியல் வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகி விடலாம். தினகரன், ஓபிஎஸ் பற்றி எல்லாம் பேசும் பாஜக, ஜெயலலிதாவுக்கு நெருங்கிய தோழியாக இருந்த சசிகலாவைப் பற்றி எதுவும் பேசுவதில்லை. சித்தியைப் பற்றி தினகரனும் கவலைப்படுவதில்லை.

தன்னை அரியணையில் அமர்த்தி அழகுபார்த்த சின்னம்மா பற்றிய பேச்சை ஓபிஎஸ்ஸும் எடுப்பதில்லை. இவர்கள் இருவரும் தங்களுக்கான வழியைத் தேடுவதில் பிஸியாக இருக்கிறார்கள். இவர்களை ஆளாக்கி பேராக்கிய சசிகலா தான் தனிமைப்படுத்தப்பட்டு நிற்கிறார் பாவம்.

சசிகலாவின் இன்றைய நிலை குறித்து நம்மிடம் பேசிய அவரது ஆதரவாளர்கள் சிலர், ''இன்று சின்னம்மாவுக்கும் தினகரனுக்கும் விசுவாசமாக இருப்பவர்களில் பலரும், அதிகாரத்தில் இருந்த போது அவர்களால் எந்தப் பலனும் அனுபவிக்காதவர்கள் தான்.

இவர்கள் இருவராலும் பலனை அடைந்தவர்கள் தான் இப்போது இவர்களுக்கு எதிராக கச்சைகட்டி நிற்கிறார்கள். அதனால் தினகரன் தனி வழி போக ஆரம்பித்து விட்டார். ஓபிஎஸ் அதிமுகவுக்குள் குடியேற அமித் ஷாவுக்கு அப்ளிகேஷன் போட்டுக் கொண்டிருக்கிறார். சின்னம்மா தான் போகும் வழி தெரியாமல் நிற்கிறார்'' என்றார்கள்.




# அறிவியல் இயக்க கல்லல் கிளையில் பாரதி விழா





தமிழ்நாடு அறிவியல் இயக்க கல்லல் கிளை சார்பாக மகாகவி பாரதியாரின் பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. விக்ரம் சாராபாய், முத்து லட்சுமி, சர்.சி.வி. ராமன் துளிர் இல்ல மாணவ மாணவிகள் இதில் பங்கேற்றனர். விழாவிற்கு தலைமையேற்ற மாவட்ட பொருளாளர் பிரபு பாரதியாரின் பெருமைகளை எடுத்துக் கூறினார். அதில் பாரதியாரின் நாட்டுப் பெற்று, மொழிப்பற்று, சமூக அக்கறை, பெண் விடுதலை ஆகியன குறித்த கருத்துகளை எடுத்துரைத்தார். பாரதியாரின் இதழியல் பணியையும், அவரின் கவிதை, கட்டுரைகளைப் பற்றியும், விளக்கினார். மேலும் பாரதியாரின் கேலிச் சித்திரங்கள் வரையும் திறனைக் குறிப்பிட்டுப் பேசினார். பாரதியாரின் கவிதைகளைப் பாடியதுடன் மாணவ மாணவிகளையும் பாட வைத்தார். பாரதியார் குறித்த அவர்களின் கேள்விகளுக்கு விடையளித்தார். துளிர் இல்ல மாணவ மாண விகளுக்கு வரும் அரையாண்டு தேர்வு விடுமுறையில் பாரதி குறித்த பேச்சு, கவிதை, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கிளைப் பொருளாளர் நாகரத்தினம், துளிர் இல்லப் பொறுப்பாளர் சித்திரைச் செல்வி, உறுப்பினர் விஜயலட்சுமி கலந்து கொண்டனர்.



# மானாமதுரை பள்ளிகளில் விலையில்லா மிதிவண்டிகளை தமிழரசி எம்எல்ஏ வழங்கினார்

## மாரியப்பன் கென்னடி, பொன்னுச்சாமி, இர்ஜாமணி, வைஸ் பாலசுந்தரம், வளர்மதி பங்கேற்பு

மானாமதுரை, டிச.14-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகரில் செயல்படும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் சுமார் நானூறுக்கும் மேற்பட்ட, பள்ளி மாணவியருக்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர்

ஆ.தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு வழங்கினார்...

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மானாமதுரை நகர்மன்றத் தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி, நகர திமுக செயலாளர் க. பொன்னுச்சாமி , கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை. இராஜாமணி, வைஸ் சேர்மன் பாலசுந்தரம் , மாவட்ட மகளிரணி வளர்மதி கலைச்செல்வன் , மற்றும் பள்ளி ஆசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மொத்தம் 485 விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

இதனிடையே மாணவர்கள் மத்தியில் பேசிய ஆ. தமிழரசி கல்விக்காக கழக அரசு செய்துள்ள சாதனைகளை பட்டியலிட்டு பேசினார்...

மேலும் மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டைகளை வழங்கியதும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் தலைமையிலான அரசுதான் எனவும் பேசினார்...

இந்த நிகழ்ச்சியில், பொருளாளர் மயில்வாகனம் , தொகுதி ஐடி விங் கவுன்சிலர் இந்துமதி திருமுருகன், கவுன்சிலர் காளீஸ்வரி அழகுசுந்தரம் , ஒன்றிய மேனாள் கவுன்சிலர் கொன்னக்குளம் மலைச்சாமி , சசி பிரசாத் உள்ளிட்ட ஆசிரியர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்...

# சிவகங்கை: தமிழக அரசுக்கு ரூ.3.72 லட்சம் நிதியிழப்பு ஏற்படுத்திய மோட்டார் வாகன ஆய்வாளர்

காரைக்குடி, டிச.14-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வாளராக விஜய குமார் 2023-ல் ஆய்வாளராக பணிபுரிந்தார். மோட்டார் வாகனச் சட்டப்படி போக்குவரத்து ஆணையர் அனுமதி பெறாமல் வாகனங்களின் வடிவமைப்பை மாற்றக் கூடாது என்பது விதிமுறை மேலும், சுற்றுலா வேனில் 12 + 1 என்ற அடிப்படையிலேயே ஆட்கள் பயணிக்க முடியும் ஆனால் காரைக்குடி பகுதியில் ஒரு சுற்றுலா வேன் 25 + 1 ஆகவும், 2 வேன்கள் தலா 21 + 1 ஆகவும் ஆட்களை ஏற்றும் வகையில் வடிவம் மாற்றப்பட்டிருந்தன. இந்த 3 வேன்களுக்கும் கடந்த 2023ம் ஆண்டு வேன் உரிமையாளர்கள் (வண்டி எண்: TN 67 BJ1729,TN18 AK 1768, TN 34 S9065) கோரி விண்ணப்பித்தனர். உறுதி தன்மை சான்று இந்த வேன்களை அக்



கால கட்டத்தில் ஆய்வாளர் விஜயகுமார் ஆய்வு செய்தார். விதிப் படி பயணிகளை ஏற்றி செல்லும் வேன் டிரைவருடன் சேர்த்து 13 பயணிகள் அமரும் விதத்தில் மட்டுமே இருக்க வேண்டும். ஆனால் வாகன உரிமையாளர்கள் பஸ் போன்று டிரைவருடன் சேர்த்து பயணிகள் அமரும் விதத்தில் சீட் களை மாற்றியிருந்தனர்.

இதுபோன்று வேனை மாற்றி அமைக்க அரசு போக்குவரத்துத்துறை கமிஷனரிடம் அனுமதி பெற வேண்டும். தவறியிருந்தால் வேன்களின் உரிமையாளர்கள் மீது ரூ.7.72 லட் சம் வரை அபராதம் வசூலிக்க வேண்டும் அதற்கு மாறாக வேன் உரிமையாளர்களிடம் அபராதத்தை வசூலிக்காமல் அனைத்து வேன்களுக்கும் உறுதி தன்மை சான்று அளித்துள்ளார்.

இதன் மூலம் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியதாக எழுந்த புகாரின் பேரில் சிவகங்கை லஞ்ச ஒழிப்புத் துறை காவல் துணை கண்காணிப்பாளர் ஜான்பிரிட்டோ, ஆய்வாளர் ஜேசுதாஸ் ஆகியோர் வட்டார வாகன ஆய்வாளர் விஜய குமார் மீது வழக்கு பதிவு செய்தனர். விஜயகுமார் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் கிரேடு 1 மோட்டார் வாகன ஆய்வாளராகப் பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.






# சிவகங்கையில் ஜாக்டோ ஜியோ சார்பில் உரிமை மீட்பு உண்ணாவிரதம்

சிவகங்கை, டிச.14-

சிவகங்கையில் தமிழ்நாடு அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் இயக்கங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ சார்பில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சிவகங்கை அரண்மனை வாசல் முன்பு உரிமை மீட்பு உண்ணாவிரதம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் இராதாகிருஷ்ணன், சகாய தைனேஸ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நாகராஜன், இராஜ்குமார் முன்னிலை வகித்தனர். மாநில ஒருங்கிணைப்பாளரும், தமிழ்நாடு முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில தலைவருமான பிரபாகரன் உண்ணாவிரதத்தை தொடங்கி வைத்து பேசினார். பேராட்டத்தில் 01.04.2003 க்கு பிறகு அரசுப் பணியில் சேர்ந்தோருக்கு பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தினை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தினை உடன் அமல்படுத்திட வேண்டும், ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) குறித்த உச்சநீதிமன்ற தீர்ப்பினைக் காரணம் காட்டி, 23.08.2010 முன்னதாக பணி ஏற்ற ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலில் இருந்தும் TET தேர்வில் இருந்தும் விலக்களித்து ஆசிரியர்களை பாதுகாத்திட தமிழ்நாடு அரசு சீராய்வு மனு உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், இடைநிலை ஆசிரியர்களுக்கு, முதுகலை ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு, உடற்கல்வி இயக்குனர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் களையப்பட வேண்டும், தொடக்கக் கல்வித்துறையில் பணிபுரியும் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள பள்ளி கல்வித்துறை அரசாணை 243 நாள்: 21.2.2023 மற்றும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையில் அரசாணை 75 நாள்: 30.09.2024 ஆகியவற்றை உடனடியாக ரத்து செய்திட வேண்டும், முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசு பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அலுவலர்கள் களப்பணியாளர்கள் பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் ஆகியோருக்கான ஊதிய முரண்பாட்டினை களைய வேண்டும், கல்லூரி பேராசிரியர்களுக்கான நிலுவையில் உள்ள பணி மேம்பாடு சிகிஷி, பேராசிரியர் பணி மேம்பாடு, ஊக்க ஊதிய உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும், சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கல்வித் துறையில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்கள், தொகுப்பூதியத்தில் பணியாற்றும் MRB செவிலியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், அரசு தொழில் பயிற்சி நிலைய ஊழியர்கள், பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும்.

மேலும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும், அரசின் பல்வேறு துறைகளில் 30% மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுவதற்காக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். கருணை அடிப்படை பணி நியமனத்திற்கான உச்சவரம்பினை 5% குறைக்கப்பட்டதை ரத்து செய்து மீண்டும் 25% வழங்கிட வேண்டும், 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையினை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசு பணியாளர்கள் ஆகியோருக்கு உடனடியாக வழங்கிட வேண்டும், 2002 முதல் 2010 வரை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அரசு பணியாளர்களின் பணிக்காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும், சாலை பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தினை முறைப்படித்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

உண்ணாவிரதம் போராட்டத்தில் மாவட்ட உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் சேவுகமூர்த்தி, கோவிந்தராஜ், தயானந்தன், உதயகுமார், மலைராஜ், டேவிட் அந்தோணி ராஜ், சேசுராஜ், ஆரோக்கியராஜ், நாகராஜன், வளனரசு, லதா, லூயிஸ் ஜோசப் பிரகாஷ், பாண்டி ஆகியோர் போராட்ட உரையாற்றினர்.







■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில்வே காலனி ஆதனூர் சாலையில் அருள் பாலிக்கும் ஸ்ரீ நலம் தரும் சீரடி சாய் பாபா திருக்கோவிலின்எட்டாம் வருடாபிஷேகம் மிக சிறப்பாக திரு.நாகமணி ஐயர் தலைமையில் ஹோமம் வளர்க்கப்பட்டு 108 சங்காபிஷேகமும் நடைபெற்றது. சாய் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு அன்னதானமும், பிரசாதமும் பெற்றுச் சென்றனர். விழாவிற்கான ஏற்பாடுகளை டிரஸ்டி ராஜேஸ்வரி அம்மாள் மற்றும் சாய் பக்தர்கள் செய்தனர்.

# உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த ஆர் எஸ் மங்கலம் சிறுமி சர்விகா

ஆர் எஸ் மங்கலம், டிச.14-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் பகுதியை சேர்ந்த ரமேஷ் மகள் சர்விகா(5) வின்னர்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் முதல் வகுப்பு படித்து வருகிறார் .ஜாக்கி உலக சாதனைக்காக தமிழ் எழுத்துகளான உயிரெழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள், ஆயுத எழுத்துக்களான 247 எழுத்துக்களை 17 நிமிடங்களில் எழுதி சிறுமி சர்விகா சாதனை படைத்துள்ளார்.




இளம் வயதில் சிறுமியின் மன நினைவாற்றலால் அசத்திய சிறுமி ஜாக்கி உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

ஜாக்கி புக் ஆப் வேர்ல்ட் ரெக்கார்ட் சார்பில் உலக சாதனைக்கான சான்றிதழ் ,கேடயம் வழங்கி சிறுமி கவுரவப்படுத்தப்பட்டர்.

இதனை தொடர்ந்து சிறுமிக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.

இதை போன்று ஒவ்வொரு குழந்தைகளிடமும் தனி திறமைகளை கண்டறிந்து பெற்றோர்கள் குழந்தைகளை ஊக்கப்படுத்த வேண்டும் என சிறுமியின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

# 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்' இரண்டாம் கட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கும் விழா

வேலூர், டிச.14-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகாவில் உள்ள தனியார் மண்டபத்தில், 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்' இரண்டாம் கட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கும் விழா, மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கலந்து கொண்டு, இரண்டாம் கட்டதவணையாக பெண்களுக்கு ரூ.1000 உதவித்தொகை வழங்கினார்.

இந்த விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், அமுலு, நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், துணை மேயர் சுனில் குமார், அரசு அதிகாரிகள், பணியாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் மூலம் மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக மொத்தம் 33,540



மகளிர்களுக்கு உரிமைத் தொகை வழங்கப்பட்டது.


விழாவில் உரையாற்றிய அமைச்சர் துரைமுருகன், முதல்வரின் ஆட்சியில் ஒவ்வொரு திட்டமும் சிறப்பாக மட்டுமல்லாமல் மக்களுக்கு மிகுந்த பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படுகிறது என்றார். முதல்வர் பதவி ஏற்றதும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அறிவித்தார். பெண்கள் இலவசமாக பேருந்துகளில் பயணம் செய்யும் திட்டமும், மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டமும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இன்று நமது மாவட்டத்தில் 33,540 மகளிர்களுக்கு உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் மூன்றாம் கட்டமாக மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்றார்.

மேலும் அவர் பேசுகையில், இந்த திட்டத்தின் மூலம் சாதாரண பெண்கள் உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். அதனால் பெண்கள் கல்வி மிகவும் முக்கியம் என்பதை நாம் பழங்காலம் முதலே வலியுறுத்தி வருகிறோம். பெண்களுக்கு எல்லா துறைகளிலும் சாதிக்கக் கூடிய திறமை உள்ளது. ஒரு காலத்தில் பெண்களை கட்டுப்படுத்தி வைத்திருந்த நிலை மாற்றப்பட்டு, இன்று தாய்மார்கள் பஞ்சாயத்து தலைவர் முதல் மேயர் வரை தலைமைப் பொறுப்புகளில் உள்ளனர். இந்த மாற்றம் கலைஞர் காலம் முதல் 'தளபதி' காலம் வரை திமுக ஆட்சியில் நிகழ்ந்த சாதனையாகும்; திமுக ஆட்சி இந்த துறையில் வரலாற்றுச் சாதனைகளை படைத்துள்ளது.

# கோவை மாநகராட்சி 80வது வார்டில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பொது கழிப்பிடங்கள் திறப்பு விழா

கோவை, டிச.14-

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், 80வது வார்டுக்கு உட்பட்ட உப்பு மண்டி வீதி, கெம்பட்டி காலனி பகுதியில், பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் தூய்மை இந்தியா (2.0) ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பொதுக் கழிப்பிடங்கள் இந்நிகழ்ச்சிக்கு கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ராஜ்குமார் மற்றும் மேயர்ரங்கநாயகி ராமச்சந்திரன் ஆகியோர் தலைமை தாங்கி, புதிய கட்டிடங்களை ரிப்பன் வெட்டி பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர். மாநகராட்சி



ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் முன்னிலை வகித்தார். உடன் 80 வது வார்டு மாமன்ற உறுப்பினரும், பொது சுகாதாரக் குழுத் தலைவர் மாரிசெல்வன் அவர்கள் உடனிருந்து சிறப்பித்தார்.

புதிதாகத் திறக்கப்பட்டுள்ள இந்த பொது கழிப்பிடங்கள் அப்பகுதி மக்களின் நீண்ட நாள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், சுகாதார த்தை மேம்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் மாநகராட்சி அலுவலர்கள், பகுதி பொறுப்பாளர் முருகேசன் ,வார்டு செயலாளர் தங்கவேலன், கழக நிர்வாகிகள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# மார்கழி மாதத்தில் இந்த மூன்று காரியங்களை மட்டும் செய்யவே கூடாது



மார்கழி மாதம் இறைவனின் அருளை முழுமையாக பெறுவதற்கான மாதமாகும். இந்த மாதத்தில் சில சடங்குகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். அப்படி தவிர்க்காமல் சில சுப காரியங்களை செய்வதால் என்னென்ன விளைவுகள் ஏற்படும், மார்கழி மாதத்தில் ஏன் சுப காரியங்களை தவிர்க்க வேண்டும் என சொல்கிறார்கள் என்ற காரணத்தை தெரிந்து கொள்ளலாம்.

மார்கழி மாதம் தெய்வ வழிபாட்டிற்குரிய மிக முக்கியமான மாதமாகும். குறிப்பாக நம்முடைய கர்மவினைகளில் இருந்தும், அதனால் ஏற்படும் கடுமையான துன்பங்கள், கஷ்டங்களில் இருந்தும் விடுபடுவதற்கான மாதமாகும். அதனால் மார்கழி மாதத்தின் அனைத்து நாட்களுமே முக்கியமானதாகவும், சிறப்புமிக்கதாகவும் கருதப்படுகிறது. இந்த ஆண்டு மார்கழி மாதம் டிசம்பர் 16ம் தேதியன்று காலை 04.27 மணிக்கு பிறக்கிறது. சூரிய பகவான், ஒன்பதாவது ராசியான தனுசு ராசியில் இந்த சமயத்தில் தனது பயணத்தை துவக்குவார்.

மார்கழி மாதத்தில் திருமணம், வளைகாப்பு, புதிய தொழில் துவங்குவது, புதிய வீட்டிற்கு குடிபோவது உள்ளிட்ட சுப காரியங்களை செய்ய மாட்டார்கள். இவற்றை தவிர்த்து, தெய்வ வழிபாட்டிலும், விரதம், மந்திர ஜபம் போன்ற ஆன்மீக பணிகளிலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு உண்மையான காரணம் என்ன என்று தெரியாததால் பலரும் இதை மூட நம்பிக்கை என்று சொல்லி புறம் தள்ளி விடுகிறார்கள். ஆனால் இதற்கு பின்னால் ஆழ்ந்த காரணம் இருப்பதாக சொல்லப்படுகிறது.

அதாவது, மார்கழி மாதத்தில் சூரியன் பயணிக்க துவங்கும் தனுசு ராசி, குரு பகவானின் ஆட்சி வீடாகும். மங்களகாரகன் என சொல்லப்படும் குருவின் வீட்டில் சூரியன் நுழையும் போது சூரியனின் பலம், ஆற்றல் குறைந்து காணப்படும். குருவின் ஆதிக்கமே அதிகமாக இருக்கும். திருமணம், தொழில் ஆகியவற்றிற்கு காரணமான குரு தொடர்பான சுப காரியங்களை செய்யக் கூடாது என்கிறார்கள். குறிப்பாக மூன்று காரியங்களை மட்டும் மார்கழி மாதத்தில் செய்யவே கூடாது. அப்படி செய்வதால் மகிழ்ச்சி, அதிர்ஷ்டம் ஆகியவை பாதிக்கப்படுவதுடன், மனஅழுத்தம், நோய், பொருளாதார நெருக்கடி ஆகியவையும் அதிகரிக்கும் என சொல்லப்படுகிறது.

மார்கழி மாதத்தில் தவிர்க்க வேண்டிய 3 விஷயங்கள் :

1. டிசம்பர் 16ம் தேதி காலை 04.27 மணி துவங்கி, ஜனவரி 14ம் தேதி பகல் 03.13 மணி வரையிலான மார்கழி மாதத்தில் புது வீடு குடியேறுவது அசுப காரியமாக கருதப்படுகிறது. புது வீடு குடியேறுவதுடன், வீடு கட்டும் பணிகளை மார்கழியில் துவங்குவதை தவிர்க்க வேண்டும். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி பாதிக்கப்படுவதுடன் பிரச்சனைகள் வந்து கொண்டே இருக்கும். அதே போல் வீட்டில் புதிதாக சாமி சிலைகள் வாங்கி வந்து வைப்பதையும் மார்கழி மாதத்தில் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

2. மார்கழி மாதத்தில் புதிய தொழில்கள் துவங்க கூடாது என அறிவுறுத்தப்படுகிறது. அப்படி துவங்குவதால் வெற்றி பெறுவதில் தடைகள் ஏற்படும். அதோடு வியாபாரம் மற்றும் தொழிலில் பொருளாதார இழப்புக்களையும் சந்திக்க வேண்டி இருக்கும். கடன், நெருக்கடி போன்ற பிரச்சனைகளும் ஏற்பட வாய்ப்புள்ளது.

3. தெய்வீக மாதமான மார்கழி மாதத்தில் திருமணம், நிச்சயதார்த்தம் உள்ளிட்ட சுப காரியங்கள் நடத்துவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். இது தீமையான விளைவுகளை ஏற்படுத்தும் என சொல்லப்படுகிறது. சூரியன் பலவீனமாக இருக்கும் காலம் என்பதால் இந்த மாதத்தில் செய்யும் செயல்கள் நீண்ட நாள் பலனை தராது. தடைகள் அதிகம் ஏற்படும். அதே போல் புதிய வாகனங்கள், நிலம், தங்கம் அல்லது வெள்ளி போன்ற மங்கள பொருட்கள் வாங்குவதற்கும் மார்கழி மாதம் ஏற்றதல்ல.

இதற்கு மாறாக மார்கழி மாதத்தில் சூரிய பகவானுக்குரிய மந்திரங்களை தினமும் காலையில் சொல்லி வருவதால் சூரிய பகவானின் அருள் கிடைக்கும். சூரியனின் அருளுடன் பல நல்ல விஷயங்களும் வாழ்க்கையில் நடைபெற இந்த மந்திரங்கள் துணை செய்யும்.

# செல்வத்தை பெருக்கும் குபேர தலங்கள்... வறுமையை விரட்டும் 13 அதிசய ஆலயங்கள்



குறைவில்லாத செல்வத்தை பெற வேண்டும். இழந்த செல்வத்தை மீண்டும் பெற வேண்டும் என்பவர்கள் வழிபட வேண்டிய தெய்வம் குபேரன். குபேரனின் அருள் இருந்தால் நம்முடைய வாழ்க்கையிலும் குறைவில்லாத செல்வம் பெருகிக் கொண்டே இருக்கும் என்பது நம்பிக்கை. அப்படி பெரும் செல்வத்தை பெறுவதற்கு நாம் சென்று வழிபட வேண்டிய குபேர கோவில்கள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

வறுமை விலகி, செல்வம் குவிய அனைவரும் வேண்டிக்கொள்ளும் தெய்வம், நவநிதிகளின் அரசனான குபேரன். சிவ பெருமான் மீது கொண்ட தீராத பக்தியின் காரணமாக செல்வத்திற்கு அதிபதியான குபேரன், தன் அகங்காரத்தால் அனைத்தையும் இழந்தார். இறைவனை வழிபட்டு, அவரை சரணடைந்ததால் மீண்டும் செல்வத்தின் தலைவர் ஆனார். அப்படி குபேரன் சென்று வழிபட்ட தலங்களில் நாமும் சென்று வழிபட்டாலும், தரிசித்தாலும் வாழ்வில் வறுமை அகன்று வளம் பெருகும் என்பதே சாஸ்திர நம்பிக்கை.

குபேரன் தவமிருந்து, இழந்த செல்வங்களை பெற்ற 13 அதிசய ஆலயங்கள் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்ளலாம். இந்த தலங்களில் ஏதாவது ஒரு தலத்திற்காவது சென்று வழிபடுவது சிறப்பு. அப்படி செல்ல முடியாதவர்கள் இருந்த இடத்தில் இருந்தே, குறிப்பிட்ட அந்த தலத்தை நினைத்து வழிபட்டாலும் குபேரனின் அருள் கிடைக்கும்என சொல்லப்படுகிறது.

செல்வத்தை பெருக வைக்கும் 13 குபேர தலங்கள் :

1. செல்லூர் - மதுரை (திருவாப்புடையார் கோவில்)

அகத்தியர் உபதேசத்தால் தவமிருந்த புண்ணிய சேனன், அகந்தையால் கண்ணிழந்தான். பிறகு பாவம் நீங்கி, "குபேரன்" என்ற செல்வநாதன் ஆன இடம். இங்கு வழிபட்டால் இழந்த செல்வம் மீண்டும் கை வந்து சேரும்.

2. திருக்கோளூர் - வைத்த மாநதி பெருமாள்

உமையம்மையை ரசித்த குற்றத்தால் நவநிதிகளை இழந்த குபேரன், மாநதி பெருமாளை வேண்டி மீண்டும் செல்வம் பெற்ற தலம். இங்கு உள்ள தீர்த்தம்: "குபேர தீர்த்தம்"

3. திருவண்ணாமலை - குபேர லிங்கம்

கிரிவல பாதையில் உள்ள ஏழாவது லிங்கமான குபேர லிங்கத்தை கண்டு அதீத செல்வம் பெருகும் தலம்.

4. திருவானைக்காவல் - குபேர லிங்கம்

மகாலட்சுமியின் கரத்தால் பெற்ற இந்த சுயம்பு லிங்கத்தை, சுக்கிர ஓரையில் வெள்ளை ஆடை சமர்ப்பித்து வழிபட்டால், வறுமை முற்றிலும் நீங்கும்!

5. தஞ்சபுரீஸ்வரர் - வன்னிக்காடு

புஷ்பக விமானத்தை இழந்த குபேரன் இங்கு தவமிருந்து நவநிதிகளும், அஷ்டசித்திகளும் பெற்ற தலம்.

6. அழகாபுரி - குபேர மகாலட்சுமி ஆலயம்

குபேரன் உருவாக்கிய நகரம். தீபாவளியன்று நடைபெறும் குபேர ஹோமம் உலகப் புகழ் பெற்றது.

7. செட்டிகுளம் - 12 குபேரர்கள்

ஒரே கோவிலில் 12 ராசிகளுக்கும் அருள் தரும் 12 குபேர சிற்பங்கள் உள்ளன. திருச்சி துறையூருக்கு அருகில் இக்கோவில் அமைந்துள்ளது.

8. கீழவேளூர் - நாகை மாவட்டம்

நந்தியெம்பெருமானின் காலில் விழுந்து, இழந்த செல்வத்தை குபேரன் மீட்ட தலம் இது. இந்த தலம், செல்வ மீட்புத் தலம் ஆகும்.

9. கல்லிடைக் குறிச்சி - வராஹ பெருமாள்

குபேரன் கட்டிய கோவில் இது. இங்குத் தரிசனம் செய்தால் செல்வக் குறைபாடு வாழ்வில் நீங்கும்!

10. திருத்தேவூர் - தேவபுரீஸ்வரர்

இராவணனால் இழந்த நிதிகளை குபேரன் மீண்டும் பெற்ற தலம்!

11. சிவபுரம் - கும்பகோணம்

பூமிக்கடியில் இருப்பதாக நம்பப்படும் இறைவன் தளபதிக்கு இங்கு குபேர ஸ்தானம் அளிக்கப்பட்டது!

12. விருத்தாசலம் - குபேர தீர்த்தம்

விருத்தகிரீஸ்வரரை வழிபட்டு அசைக்க முடியாத செல்வத்தை குபேரன் பெற்ற தலம்.

13. வாலாஜா பேட்டை -தன்வந்திரி பீடம்

இங்கு லட்சுமிகுபேரன் இணைந்து அருளுகிறார்கள். இதனால் ஆரோக்கியமும் செல்வமும் இரண்டும் சேர்ந்து கிடைக்கும்.

# ஜேக்கப் டஃபி, மைக்கேல் ரே அசத்தல் பந்து வீச்சு: நியூஸிலாந்து அணி அபார வெற்றி



மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து மேற்கு இந்தியத் தீவுகள் அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நடைபெற்று வருகிறது. இதன் முதல் இன்னிங்ஸில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி 205 ரன்களும், நியூஸிலாந்து அணி 278 ரன்களும் எடுத்தன.

73 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்ஸை விளையாடிய மேற்கு இந்தியத் தீவுகள் அணி 2வது நாள் ஆட்டத்தின் முடிவில் 10 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 32 ரன்கள் எடுத்தது. பிரண்டன் கிங் 15, கவேம் ஹாட்ஜ் 3 ரன்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று 3வது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய மேற்கு இந்தியத் தீவுகள் அணி 46.2 ஓவர்களில் 128 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. கவேம் ஹாட்ஜ் 35, பிரண்டன் கிங் 22, ஷாய் ஹோப் 5, கேப்டன் ராஸ்டன் சேஸ் 2, ஜஸ்டின் கிரீவ்ஸ் 25, டெவின் இம்லாக் 5, ஜெய்டன் சீல்ஸ் 0, ஓஜய் ஷீல்ட்ஸ் 9 ரன்களில் நடையை கட்டினர்.

நியூஸிலாந்து அணி தரப்பில் ஜேக்கப் டஃபி 5, மைக்கேல் ரே 3 விக்கெட்களை வீழ்த்தினர். 56 ரன்கள் இலக்குடன் பேட் செய்த நியூஸிலாந்து அணி 10 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 57 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. கேப்டன் டாம் லேதம் 9 ரன்கள் எடுத்த நிலையில் ஆண்டர்சன் பிலிப் பந்தில் ஆட்டமிழந்தார்.

டேவன் கான்வே 28, கேன் வில்லியம்சன் 16 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகனாக ஜேக்கப் டஃபி தேர்வானார். 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது. கிறைஸ்ட்சர்ச்சில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டி டிராவில் முடிவடைந்திருந்தது. கடைசி மற்றும் 3வது டெஸ்ட் போட்டி வரும் 18ம் தேதி மவுண்ட் மவுங்கனியில் உள்ள பே ஓவல் மைதானத்தில் தொடங்குகிறது.

# ஓய்வு முடிவை திரும்ப பெற்ற வினேஷ் போகத்: லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கிற்கு தயாராகிறார்



தனது ஓய்வு முடிவை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளார் இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத். எதிர்வரும் 2028ம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக்கில் பங்கேற்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

31 வயதான வினேஷ் போகத், கடந்த 2024ம் ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் நிர்ணயித்த அளவைவிட உடல் எடை 100 கிராம் கூடியதால் மல்யுத்த இறுதிப் போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதன் மூலம் பதக்கம் வெல்லும் வாய்ப்பை அவர் இழந்தார். இதையடுத்து ஓய்வு பெறுவதாக வினேஷ் போகத் கடந்த ஆண்டு அறிவித்தார்.

“பாரிஸ் போட்டிதான் கடைசியா என்னிடம் பலர் கேட்பது உண்டு. அதற்கு நீண்ட நாட்களாகவே என்னிடம் பதில் இல்லை. அழுத்தம், எதிர்பார்ப்பு, என் லட்சியம் என எல்லாவற்றில் இருந்தும் விடைபெற விரும்பினேன். இந்த பயணத்தில் எனது அர்ப்பணிப்பு, ஈடுபாடு, சவால்கள் உள்ளிட்டவற்றை அளவிட நேரம் எடுத்துக் கொண்டேன்.

இதில் எனக்கு கிடைத்த பிரதிபலிப்பில் உண்மையை அறிந்தேன். அது என்னவென்றால் நான் மீண்டும் களமாட விரும்புகிறேன். இதனால் எனது ஓய்வு முடிவை திரும்ப பெறுகிறேன். இதோ லாஸ் ஏஞ்சல்ஸ் 2028 ஒலிம்பிக்கை நோக்கி அஞ்சாத நெஞ்சோடு அடியெடுத்து வைக்கிறேன். இந்த பயணத்தில் எனது மகனும் சியர் லீடராக இணைகிறார்” என வினேஷ் போகத் தெரிவித்துள்ளார்.

தற்போது ஹரியானா மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக வினேஷ் போகத் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘சரியான நேரத்தில் பார்முக்கு திரும்புவர்’ கில், சூர்யகுமார் மீது இந்திய துணை பயிற்சியாளர் நம்பிக்கை

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக நேற்று முன்தினம் முலான்பூரில் நடைபெற்ற 2வது டி20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 51 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. 214 ரன்கள் இலக்கை துரத்திய இந்திய அணி 19.1வது ஓவரில் 162 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக திலக் வர்மா 62 ரன்கள் சேர்த்தார்.

தொடக்க வீரரான ஷுப்மன் சந்தித்த முதல் பந்திலேயே ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். கேப்டன் சூர்யகுமார் யாதவ் 5 ரன்களில் நடையை கட்டினார். முதல் போட்டியில் சிறப்பாக விளையாடிய ஹர்திக் பாண்டியா 20, அக்சர் படேல் 21 ரன்களில் வெளியேறினர். பெரிய அளவிலான இலக்கை துரத்திய நிலையில் ஷுப்மன் கில்லும், சூர்யகுமார் யாதவும் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாதது அணிக்கு அழுத்தத்தை அதிகரித்தது. இவர்கள் இருவரிடம் இருந்து சர்வதேச டி20 போட்டிகளில் கடந்த ஓராண்டு காலமாகவே பெரிய அளவிலான மட்டை வீச்சு வெளிப்படவில்லை. ஷுப்மன் கில் கடந்த செப்டம்பரில் நடைபெற்ற ஆசிய கோப்பை தொடரின் போது இந்திய டி20 கிரிக்கெட் அணிக்குள் மீண்டும் கொண்டுவரப்பட்டார். இந்த தொடருக்கு முன்னதாக இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் ஷுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி 2 வெற்றிகளையும், தொடரை சமனிலும் முடித்திருந்தது. ஷுப்மன் கில் டி20 அணிக்குள் கொண்டுவரப்பட்டதால் சிறந்த பார்மில் உள்ள தொடக்க வீரரான சஞ்சு சாம்சன் வெளியே அமரவைக்கப்பட்டார். ஆனால் ஷுப்மன் கில்லின் மட்டைவீச்சில் இருந்து போதிய அளவிலான ரன் குவிப்பு வரவில்லை. தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான முதல் டி 20 போட்டியில் 4 ரன்களில் ஆட்டமிழந்த அவர், நேற்று முன்தினம் நடைபெற்ற 2வது ஆட்டத்தில் ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். டி20 உலகக் கோப்பை வரும் 2026ம் ஆண்டு பிப்ரவரிமார்ச் மாதம் இந்தியாவில் நடைபெற உள்ள நிலையில் ஷுப்மன் கில்லின் மோசமான பார்ம் கவலையையும், பல்வேறு கேள்விகளையும் உருவாக்கி உள்ளது. இந்நிலையில் தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான 2வது டி20 ஆட்டத்தில் 51 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்த பின்னர் இந்திய அணியின் துணை பயிற்சியாளரான டென் டாஷேட் கூறியதாவது: கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலிய தொடருக்கு பின்னர் ஷுப்மன் கில்லின் மனநிலையில் சிறந்த மாற்றத்தை கண்டோம். தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான தற்போதைய டி20 தொடரில் முதல் இரு ஆட்டங்களில் அவர், எளிதாக ஆட்டமிழந்தார். முதல் போட்டியில் பவர்பிளேவில் அதிரடியாக விளையாடுமாறு நாங்கள்தான் கூறியிருந்தோம். அந்த போட்டி நடைபெற்ற கட்டாக் ஆடுகளம் சிறப்பானது இல்லை. இதனால் அந்த ஆட்டத்தை விட்டுவிடலாம். 2வது போட்டியில் ஷுப்மன் கில் சிறந்த பந்தில் ஆட்டமிழந்தார். பார்மில் தேக்கம் அடையும் போது இது நிகழும். கில்லின் பேட்டிங் தரம் எங்களுக்கு தெரியும். அவருடைய ஐபிஎல் சாதனையைப் பார்த்தால் சீசனுக்கு 700 ரன்கள், 600 ரன்கள், 800 ரன்கள், 600 ரன்கள் என குவித்துள்ளார். அதனால் அவர், மீண்டும் பார்முக்கு திரும்புவார் என்று நாங்கள் நம்புகிறோம்.சூர்யகுமார் யாதவுக்கும் இதே நிலைமைதான். எங்கள் திட்டமிடல் மற்றும் அணியை கட்டமைத்த விதத்தில் சற்று பின்தங்கியிருக்கிறோம். வெளியில் இருந்து பார்க்கும்போது இது ஒரு கவலையாகத் தெரிகிறது, ஆனால் சூர்யகுமார் யாதவும், ஷுப்மன் கில்லும் சரியான நேரத்தில் மீண்டு வருவார்கள் என்பதில் எனக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



# சினிமா ஓடிடியை பிரித்து பார்க்கவில்லை : லிசி ஆண்டனி

ராமின் ‘தங்க மீன்கள்’ படம் மூலம் அறிமுகமானவர் நடிகை லிசி ஆண்டனி. 15 ஆண்டுகள் சினிமா துறையில் நிறைவு செய்திருக்கும் இவர், 75 படங்களில் நடித்துவிட்டார். அவர் கூறியது: திரையில் என் சம்பந்தப்பட்ட காட்சிகள் அதிகம் இருக்கும் படங்களில் என் நடிப்பு வெகுவாக பேசப்படுகிறது. அந்தவகையில் ‘குற்றம் புரிந்தவன்’ வெப்சீரிஸ், ‘குயிலி’ படங்கள் எனக்கு நல்ல பெயரை பெற்றுத்தந்தன. 15 வருட திரை வாழ்க்கையில் நிறைய மேடு பள்ளங்களை சந்தித்து விட்டேன். என்னை பொறுத்தவரை கடின உழைப்பும், விடாமுயற்சியும், பொறுமையும் தான் வெற்றிக்கு அடித்தளம். அதை உறுதியாக நம்புகிறேன்.

அதன் அடிப்படையில்தான் என் பயணமும் இருந்து வருகிறது. ஓடிடி, சினிமா என இரண்டையும் பிரித்து பார்க்கவில்லை. இரண்டுமே நமது திறமைக்கு ஓர் அடித்தளமாக இருக்கிறது. சினிமாவில் நடிக்கும்போது 2 மணி நேரத்துக்குள் ஒரு கதையை சொல்வதால் அதில் குணச்சித்திர வேடத்தில் நடிக்கும்போது, எனக்கான பகுதி குறையலாம். அதே சமயம், ஓடிடியில் எனக்கான இடம் அதிகமாக இருக்கலாம். இது மட்டும்தான் வித்தியாசம். மற்றபடி இரண்டுமே என்னை மக்கள் வரை சேர்த்திருக்கிறது. எந்த சினிமா பின்புலமும் இல்லாமல், நடிப்பு பற்றியும் தெரியாமல்தான் நடிக்க வந்தேன். என்னை நடிகையாக மாற்றியது எனது குரு இயக்குனர் ராம்தான்.

பா.ரஞ்சித், மாரி செல்வராஜ், செல்ல அய்யாவு போன்ற நல்ல இயக்குனர்களுடன் பணியாற்றியதால் நல்ல படங்களில் நல்ல வேடங்களில் நடிக்க முடிந்தது. நான் நடித்தது பெரும்பாலும் வெற்றிப் படங்களாக அமைந்ததற்கு எனது இயக்குனர்களே காரணம். இப்போது பா.ரஞ்சித்தின் ‘வேட்டுவம்’, விஷ்ணு விஷால் நடிக்கும் ‘கட்டா குஸ்தி 2’ உள்பட பல படங்களில் நடித்து வருகிறேன்.

# விது, பிரீத்தி அஸ்ரானி நடிக்கும் 29

‘மேயாத மான்’, ‘ஆடை’, ‘குலு குலு’ ஆகிய படங்களை தொடர்ந்து ரத்னகுமார் எழுதி இயக்கியுள்ள படம், ‘29’. விது, பிரீத்தி அஸ்ராணி, அனுஸ்ரீ வேகன், ஸ்ரேயாஸ் பாத்திமா நடித்துள்ளனர். மாதேஷ் மாணிக்கம் ஒளிப்பதிவு செய்ய, ஷான் ரோல்டன் இசை அமைத்துள்ளார். சதீஷ்குமார் எடிட்டிங் செய்துள்ளார். ஸ்டோன் பென்ச் பிலிம்ஸ், ஜீ ஸ்குவாட் சார்பில் கார்த்திகேயன்.எஸ், இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இணைந்து தயாரித்துள்ளனர். இப்படத்தின் டைட்டில் லுக் வெளியீட்டு நிகழ்ச்சி நடந்தது. அப்போது ரத்னகுமார் பேசுகையில், ‘பிரீத்தி அஸ்ரானியிடம் கதை சொன்னேன்.

‘சில காட்சிகள் நெருடலாக இருப்பதால், நடிக்க மனம் வரவில்லை’ என்றார். அவர் மறுத்ததால் திரைக்கதையில் சில மாற்றங்களை செய்தேன். அதற்கு பிறகு படத்தின் தோற்றம் மாறிவிட்டது. ‘நோ’ சொன்ன அவருக்கு நன்றி’ என்றார். கார்த்திக் சுப்பராஜ் பேசும்போது, ‘இது தனுஷ் நடிக்க மறுத்த கதை. அவர் ஆக்ஷன் படங்களில் நடித்து வருவதால், வேறு யாராவது நடித்தால் சிறப்பாக இருக்கும் என்று சொன்னார். பிறகு விது ஹீரோவாக தேர்வானார்’ என்றார்.






# டியர் ரதி பிரச்னையில் சிக்கும் டேட்டிங் ஜோடி

‘இறுதிப் பக்கம்’ திரைப்படத்தை தயாரித்த இன்சாம்னியாக்ஸ் ட்ரீம் கிரியேஷன்ஸ் எல்.எல்.பி.மற்றும் லாக்லைன் பிக்சர்ஸ் சார்பில் தயாரித்துள்ள படம் ‘டியர் ரதி’. இந்தப் படத்தை இறுதிப் பக்கத்தில் உதவி இயக்குனராகப் பணியாற்றிய பிரவீன் கே. மணி இயக்கியுள்ளார். படத்தின் கதை பற்றி இயக்குனர் பேசும்போது, ‘‘பெண்களிடம் பேசத் தயங்கும் ஓர் வாலிபன் ஸ்பா போன்ற ஓர் அழகு நிலையத்தில் ஒரு பெண்ணைச் சந்தித்து டேட்டிங்கிற்காக வெளியே அழைத்துச் செல்கிறான். .அதே நாளில் அந்தப் பெண்ணைத் தேடி போலீஸ் ஒரு பக்கம், ரவுடிக் கும்பல் ஒரு பக்கம் வர அதை எப்படி எதிர்கொண்டார்கள்?

என்பதுதான் ‘டியர் ரதி’ படத்தின் கதை’’ என்கிறார். படத்தில் சரவண விக்ரம் நாயகனாக நடித்துள்ளார். நாயகியாக ஹஸ்லி அமான் நடித்துள்ளார். வில்லனாக ராஜேஷ் பாலச்சந்திரன், சாய் தினேஷ் பத்ராம், யுவராஜ் சுப்பிரமணியன் மற்றும் பலர் நடித்துள்ளனர். இசை ஜோன்ஸ் ரூபர்ட். ஒளிப்பதிவு லோகேஷ் இளங்கோவன். படத்தொகுப்பு பிரேம். நிர்வாகத் தயாரிப்பு மனோ வி கண்ணதாசன். தயாரிப்பு நிர்வாகம் ஹென்றி குமார். இப்படம் வரும் ஜனவரி 2ம் தேதி வெளியாக இருக்கிறது. உத்ரா ப்ரொடக்ஷன்ஸ் வெளியிடுகிறது.



## மும்பை திமுக பொறுப்புக்குழுத் தலைவர் ம.ஜேசுராசு இல்ல மணவிழா: அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடந்தது

மும்பை திமுக பொறுப்புக்குழு தலைவர் சாத்தரசன்பட்டி ம.சேசுராசு அவர்களின் இரண்டாவது சகோதரி ம.பனிமயம். சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மறைந்த திமுக வட்ட பிரதிநிதி எம்.மார்ட்டின் புதல்வர் ஜோஸ்வா தமிழ்ச் செல்வன் அறிவொளி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்வு காரைக்குடி அமாராவதி அரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிவகங்கை மாவட்டக்கழக செயலாளரும் மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு வாழ்த்தினார்.

இந்த மணவிழா நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் முகவை மு.தென்னவன், வணக்கத்திற்குரிய காரைக்குடி மாநகர மேயர் சே.முத்துத்துரை, காரைக்குடி மாநகர செயலாளரும் வணக்கத்திற்குரிய துணை மேயருமான நா.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் கல்லல் கரு.அசோகன், கல்லல் கிழக்கு ஒன்றிய செயலாளர் நா.நெடுஞ்செழியன், சிவகங்கை மாவட்ட இளைஞரணி மேனாள் அமைப்பாளர் விசாளையங்கோட்டை சீ.இரவி , மாவட்ட வர்த்தக அணி ருக்மா சரவணன் , நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் மெ.பழனி, முன்னாள் காரைக்குடி இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.கே.பி.முனீஸ்வரன்,தொழிலாளர் நலன் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பிரசன்னா, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் அரியக்குடி கென்னடி, கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த காளையார்கோவில் ப.லூயிஸ் ஆசிரியர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த வளையம்பட்டி சார்லஸ், மும்பை திருமதி வசந்தா சோசப்ராஜ், மதுரை சோபியா ஆனந்த், ராஜேஸ், கிறிஸ்தவ போதகர்கள் அமல் பிரிட்டோ,சே.பன்னீர், கத்தோலிக்க அருட் தந்தையர்கள் மரியநாதன், ஆரோக்கியசாமி, ஆசீர்வாதம், வின்சென்ட் அமல்ராஜ், டென்சிங்ராஜன், நித்திய சகாயம். SDCC வங்கி காரைக்குடி மேலாளர் கேஆர்.மோகன் சிவகங்கை மதுரை பலநோக்கு சமூக சேவை சங்கம் முன்னாள் பணியாளர்கள் ஜான்போஸ்கோ, விசுவாசம்,சுவாமிநாதன், நாகலிங்கம், மதுபாலா, விஜயலக்ஷ்மி, சவரியம்மாள், சூசைசெல்வி , லூர்துமேரி, ரெஜினா, ராஜேஸ்வரி, நாச்சாள் போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

விழா ஏற்பாடுகளை எளிமையான முறையில் மும்பை திமு கழக பொறுப்புக் குழுத் தலைவர் ம. ஜேசுராசு குடும்பத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.




## ராயல் ஓக் பர்னிச்சர் பிரதான ஸ்டோர் பொள்ளாச்சியில் துவக்கம்

கோவை, டிச.14-

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இந்தியாவின் முன்னணி பர்னிச்சர் பிராண்ட் நிறுவனமான ராயல்ஓக் பர்னிச்சர், தனது சிறப்பு கன்ட்ரி ஸ்டோர் கலெக்ஷன் பொள்ளாச்சி, தமிழ்நாட்டில் தனது பிரதான ஸ்டோரை துவங்கி வாடிக்கையாளர்களுக்கான சேவையை ஆரம்பித்துள்ளது.இந்த மிக சிறப்பான தொடக்க விழாவில் ராயல் ஓக் நிறுவனத்தின் தலைவர் விஜய் சுப்பிரமணியம்,நிர்வாக இயக்குனர் மாதன் சுப்பிரமணியம், பொள்ளாச்சி வணிகர் சங்கத் தலைவர் மேற்பார்வையாளர் ஏர். ஏ. முத்துசாமி மற்றும் இண்டஸ் இண்ட் வங்கி கிளை மேலாளர் ரேச்சல் பௌலின் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் இந்த பிரமாண்ட துவக்க விழாவில், ராயல் ஓக் குழுவிலிருந்து ஃப்ரான்சைஸ் தலைவர் கீரண் சபாரியா,விஷுவல் மெர்சன்டைசிங் - புதிய ஸ்டோர் துவக்க பொறுப்பாளர் தம்மைய்ய கோடேரா,தமிழ்நாடு - கேரள மண்டலத் தலைவர் ரஞ்சித் கப்பட்டு,கிளஸ்டர் மேனேஜர் ராஜ்குமார் மற்றும் பொள்ளாச்சி சத்யா ஹோம் டெகோர் நிறுவனத்தின் பிராண்ட் சைஸ் கூட்டாளர் சத்யகலா கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் 10,000 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள இந்தக் கடையில், வீட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் தேவையான பல்வேறு ஃபர்னிச்சர்கள் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளது குறிப்பிடதக்கது.




■ திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் "பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம் 25ஆம் ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக சிறப்பு கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், உரையாற்றினார். அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பெ.திலகவதி. செயற்பொறியாளர் செ.சக்தி முருகன. உதவி செயற்பொறியாளர்கள் திரு.ரா.ராதாகிருஷ்ணன், திரு.ம.வெற்றி வீரன், பி.எஸ்.என்.ஏ கல்லூரி கட்டடவியல் துறை தலைவர் டாக்டர்.பி.வேலுமணி, பொறியாளர் திரு.மு.ஹபீப் ரஹ்மான், ஊரக வளர்ச்சித் துறை உதவி பொறியாளர்கள் மற்றும் சாலை ஆய்வாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# தாம்பரம் மாநகராட்சியை கண்டித்து 16-ந் தேதி நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத்தினர் பொதுமக்கள் பங்கேற்க வாரீர்

## செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் அழைப்பு



தாம்பரம், டிச.14-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் ராஜகீழ்பாக்கத்தில் நடைபெற்ற செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டத்தில் தாம்பரம் மாநகராட்சியை கண்டித்து 16-ந் தேதி நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் அலைக டலென பங்கேற்பதற்க வேண்டும் அதற்கான பணிகளை கழகத்தினர் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் பேசினார்.

செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் ராஜகீழ்பாக்கத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ஏ.எம்.பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா கலந்துகொண்டார்.

மேலும் இக்கூட்டத்தில் கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ்.மலர்மன்னன், கழக மாணவர் அணி துணை தலைவர் டி.மோசஸ் ஜோஸ்வா, வடசென்னை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளர் பி.என்.யுவக்குமார் மாவட்டக் கழக நிர்வாகிகள் பி.கே.பரசுராமன், சரஸ்வதி ஜெய்சங்கர், காஞ்சிபுரம் மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் சபரீஷ் மணிகண்டன், பகுதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் இரா.மோகன், மாடம்பாக்கம் எம்.தேவேந்திரன், தாம்பரம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சேலையூர் ஜி.சங்கர், எம்.கூத்தன், எல்லார் செழியன், ஆர்.எஸ்.சுபாஷ், இ.சம்பத்குமார், மாமன்ற உறுப்பினர் வெ.ஜெகநாதன், மதுரைப்பாக்கம் எம்.பி.மனோகரன், செட்டிபுண்ணியம் சி.ஆர்.குணசேகரன், எஸ்.வளையாபதி, ஞா.சந்திரசேகர்ராஜா, நகரக் கழகச் செயலாளர்கள் எம்.ஜி.கே.கோபிகண்ணன், மாவட்ட அணி செயலாளர்கள் பா.இராஜப்பா, ஜி.எஸ்.புருஷோத்தமன் ஜி.எம்.சாந்தகுமார், கே.பி.காசிராஜபாண்டியன், டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த், க.விஜயசங்கர், வேங்கடமங்கலம் டி.ரவி, கே.சி.வினோத்குமார், மாமன்ற உறுப்பனர்கள் ஸ்டார் பிரபா, வாணி சுரேஷ்பாபு, வாட்டர் ராஜ், மற்றும் எஸ்.ஏ.விஜயராகவன், எஸ்.ராஜாத்தி, வி.கோபால கிருஷ்ணன் உட்பட மாவட்ட, பகுதி, ஒன்றிய, அணி நிர்வாகிகள் உட்பட திரளான கழகத்தினர் கலந்துகொண்டனர்.

செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் பேசுகையில்,

செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் விடியா தி.மு.க. அரசின் அவலங்களை எடுத்துரைத்து பல்வேறு கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அதே போல் எண்ணற்ற செயல்வீரர்கள் கூட்டங்களையும் நடத்தியுள்ளோம். அதிக அளவில் கண்டன ஆர்ப்பாட்டங்கள், செயல்வீரர்கள் கூட்டங்களை நடத்திய பெருமை நமது செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்திற்கு உண்டு. அதற்கு காரணம் நமது கழகத்தினர் ஒரு காரியத்தை தொடங்கினால் அந்த காரியத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்து அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்ற தயார் நிலையில் இருப்பதே அதற்கு முக்கிய காரணமாகும். இத்தகைய செயல்வீரர்களை பெற்றியிருப்பதற்காக நமது செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பெருமை கொள்கிறது. ஒவ்வொரு பணியையும் வெற்றிகரமாக நடத்திவரும் நமக்கு வருகின்ற 16ந் தேதி தாம்பரம் மாநகராட்சியின் அவல நிலையை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தாம்பரம் சண்முகா சாலையில் நடைபெறவிருக்கின்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழக அம்மா பேரவைச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் தலைமை வகிக்கின்றார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பொதுமக்கள் அலைகடலென திரண்டுவந்து பங்கேற்க வேண்டும். அதற்காக கழகத்தினர் அனைவரும் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் குறித்த விவரங்களை பொதுமக்களிடம் கொண்டு போய் சென்று சேர்க்க வேண்டும். இத்தகைய பணியினை கழகத்தினர் சிறப்பான முறையில் செய்து முடிப்பீர்கள் என நம்புகிறேன்.

நமது தொகுதியில் போலி வாக்காளர்கள் 1,25,000 பேர் உள்ளதை ஆதாரமாக தேர்தல் ஆணையத்திடம் புகாராக தெரிவித்தோம். நாம் அளித்த புகாரினை ஆய்வு செய்து அத்தகைய ஆதாரங்கள் மிகச் சரியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட போலி வாக்காளர்கள் நீக்கப்படுவார்கள் என்பது உறுதியாகின்றது. எதிரிகள் குறுக்கு வழியில் வெற்றி பெறுவதை தடுத்து நிறுத்தும் இத்தகைய பணியினை சிறப்புடன் செய்து முடித்ததற்கு நமது கழகத்தினரின் கடுமையான உழைப்பே காரணமாகும். கழக செயற்குழு மற்றும் பொதுக்குழுவில் கழகப் பொதுச் செயலாளர் புரட்சித்தமிழர் ஆற்றிய வரலாற்று சிறப்புமிக்க உரை நமக்கெல்லாம் ஒரு புது உத்வேகத்தை அளித்துள்ளது. கழக அரசு புரட்சித்தமிழர் எடப்பாடியார் தலைமையில் அமைந்திட நாம் அயராது உழைப்போம். தாம்பரம் மாநகராட்சியை கண்டித்து நடைபெறும் கூட்டத்திற்கு பொதுமக்கள் அலைகடலென திரண்டு வருவதற்கான பணிகளை மேற்கொள்வோம். வென்று முடிப்போம்.

இவ்வாறு செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் பேசினார்.



## இலவச கண் பரிசோதனை முகாம்

தாம்பரம், டிச.14-

செங்கல்பட்டு மாவட்டம் அகரம்தென் ஊராட்சியில் மேடவாக்கம் காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் சார்பில் சிறப்பு மருத்துவ முகாம் முகவரி கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாமினை தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் நேரில் சென்று தொடங்கி வைத்து பார்வையிட்டார் இந்த நிகழ்ச்சியில் அகரம்தென் ஊராட்சி மன்ற தலைவர் சி.கே.ஜெகதீஸ்வரன், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் டாக்டர் கா.யாஸ்மின், ஐ.சுருளிராஜ், டாக்டர் எம்.சுரேஷ், எஸ்.திருமலை கணேசன் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், 100க்கு மேற்பட்டோர் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

இதில் பதுவஞ்சேரி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த முகாமில் பயன் பெற்றனர் என்று குறிப்பிடத்தக்கது



■ புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி தாலுகா மலையூர் கிராமத்தில் உள்ள வாழாகுளத்தில் கோழி கழிவுகள் கொட்டப்பட்டுள்ளது இதனால் துர்நாற்றம் வீசுகிறது தொற்று நோய் பரவும் அபாயகரமான உள்ளதால் மக்கள் குலத்திற்கு செல்ல முடியவில்லை மேலும் விவசாய நிலங்களும் பாதிக்கப்படுகின்றன கழிவுகளை அகற்றி தர மக்களின் கோரிக்கை



பிரதமர் நரேந்திர மோடிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வலிறுத்தி

## அமெரிக்கா கலிபோர்னியாவில் உள்ள DOCM என்ற தன்னார்வ இயக்கத்தினர் கையெழுத்து இயக்கதை தொடங்கி உள்ளனர்

சென்னை, டிச.14-

சென்னை பிரஸ் கிளப்பில், கலிபோர்னியா தலைமையிடமாகக் கொண்டு செயல்படும், ழிநிளி அமைப்பான Declaration of Consciousness Movement (DOCM) சார்பில் பிரதமர் நரேந்திர மோடிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வலியுறுத்தி பத்திரியாளர் சந்திப்பு நிகழ்ச்சியில் DOCM அமைப்பின் நிறுவனர் ஆதிபென் போஸ் நந்திஜி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் பேசுகையில்,

DOCM என்ற தன்னார்வ அமைப்பு தனிமனித உள்மாற்றம், நெறிமுறையான தலைமைத்துவம் மற்றும் விழிப்புணர்வு சார்ந்த உலகளாவிய முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்டது.

இச்செய்தியாளர் சந்திப்பின் முக்கிய நோக்கம் நமது நாட்டின் பிரதமர் நரேந்திரமோடிக்கு நோபல் பரிசு வழங்க வேண்டும் என உலகளாவிய முன்னெடுப்புகள் எடுத்துள்ளோம். அமைதி மற்றும் ஒற்றுமை, மனித நேயம், உள்ளிட்ட 9 அம்சங்கள் பிரதமர் நரேந்திரமோடியிடம் உள்ளன.

இந்தியாவின் உலகளாவிய தலைமையை அங்கீகக்கும் விதமாக பிரதமர் நரேந்திர மோடி உலக அமை திக்கான நோபல் பரிசு வழங்க மாபெரும் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. கோடி கணக்கான மக்களிடம் ஆன்லைன் மூலம் இந்த கையெழுத்துகள் பெறப்படும். இதனை நோபல் நிறுவனத்திற்கு பிரதமர் நரேந்திரமோடிக்கு அமைதிற்கான நோபல் பரிசினை வழங்க வலியுறுத்துவோம்.

இந்தியாவின் கலாச்சார விழிப்புணர்வு முயற்சிகளின் ஒரு பகுதியாக https://signdc.org என்ற இணைதள மூலம் பிரதமருக்கு நோபல் பரிசு வழங்க பரிந்துரை பிரச்சாரத்தில் நாடு முழுவதும் மட்டுமின்றி உலக முழுவதும் இந்த பிரச்சாரத்தை மேற்கொள்கின்றோம் என்றார்.

இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் Declaration of Consciousness Movement தன்னார்வ அமைப்பின் நிர்வாகிகள் டாக்டர் ராமேஸ்வரன், சதீஷ் சீனிவாசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

https://signdc.org/modi-ji-for-the-noble-peace/ என்ற இணைதள முகவரியில் பிரதமர் மோடிக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்க பரிந்துரை செய்யலாம்.



■ அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சத்திரப்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161